# திரப்பனே பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

---

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 01 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஆகஸ்ட் 26 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரப்பனே பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் |
| | | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் விடுபாடுகள் | 01 | – | – | கணக்கிடப்பட வில்லை | - |
| | - மேற்படி - | 01 | - | - | - | 185 |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 03 | - | 17 | - | - |
| (இ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 03 | 294 | - | - | - |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 02 | - | - | - | 60 |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

09 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,093,713 ஆக இருந்ததுடன், பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 2,026,716 ஆக இருந்தது.

### 1.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை வங்கியின் நிலையான வைப்பு மீதி ரூபா 28,000 ஆகவும் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 24,744 ஆகவும் இருந்தது. இவ் வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்படவில்லை.

### 1.3.5 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய உள்ளூராட்சி சேவை பங்களிப்புப் பணம் ரூபா 403,454 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களின் விபரங்கள் மற்றும் பிரதேச சபையில் சேவையாற்றிய காலப்பகுதி என்பவைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 2,405,746 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டம் | |
| 154 ஆம் பிரிவு | மாதாந்தம் ரூபா 50,000 அல்லது வருடத்திற்கு ரூபா 500,000 ஆன குறித்த கொடுப்பனவுகளைச் செய்கின்ற போது அக்கொடுப்பனவுகளின் அடிப்படையில் 5% நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய |

| | | |
|---|---|---|
| | | போதிலும் மீளாய்வாண்டினுள் மேற்கூறப்பட்ட எல்லையினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளில் ரூபா 72,024 நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 33,500 தொகையான பொது வைப்புக்களை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 106,638 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 380,106 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கபட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 400 | 312 | 167 | 245 | 852 | 100 |
| (ஆ) | வாடகை | 500 | 587 | 471 | 573 | 504 | 378 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 780 | 476 | 84 | 780 | 456 | 86 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 2,000 | 7,095 | 1,276 | 1,076 | 2,125 | 1,828 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள தண்டப்பணத் தொகை ரூபா 230,997 சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக ரூபா 557,610 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 இறைச்சிக்கடை வாடகை

உள்ளுராட்சி ஆணையாளரின் 1989 செப்தெம்பர் 30 ஆந் திகதிய எல்ஜீ/3 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த வாடகைப் பணத்தில் 1/3 பங்கு ஒரே தடவையில் பெறப்பட்டதன் பின்னர் எஞ்சிய பணம் 06 சமமான தவணைகளில் அறவிடப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு செய்யாமையினால் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சந்தபாகம மாட்டிறைச்சி வியாபாரக் கடையிலிருந்து அறவிட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 21,670 ஆக இருந்தது.

### 2.2.5 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு விட்ட வகையில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவை வாடகை ரூபா 512,287 ஆக இருந்ததுடன் அது 01 இலிருந்து 08 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை வருமானமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்நிலுவை வருமானத்தினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1)(i) ஆம் பிரிவின் பிரகாரம் போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதாவது இடமொன்றில் பொருட்கள் அல்லது சேவைகள் உற்பத்தி, விற்பனை அல்லது விநியோகித்தல்களில் ஈடுபடும் யாராவது ஒரு நபருக்கான அனுமதி பிரதேச சபையினால் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப் பத்திரம் பெறப்பட்டால் மாத்திரமே நடவடிக்கைகளைச் செய்ய முடியும். 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இவ்வாறான செயற்படுகளுக்காக இடங்களைப் பயன்படுத்திய 11 பேர்களிடமிருந்தும் ரூபா 83,850 பெற வேண்டியிருந்ததுடன் இதன் கருத்து என்னவெனில் அனுமதிப்பத்திரம் பெறப்படாமல் அவர்களினால் இடங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை புலனாகின்றது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப் பட்டது | உள்ளவா றான | முரண் | பாதீடு செய்யப்பட் டது | உள்ளவா றான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 7,000 | 6,877 | 123 | 7,836 | 6,524 | 1,312 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனையவை | 2,000 | 1,703 | 297 | 1,740 | 2,229 | (489) |
| உப மொத்தம் | --------- | --------- | -------- | --------- | --------- | -------- |
| மூலதனச் செலவினம் | 9,000 | 8,580 | 420 | 9,576 | 8,753 | 823 |
| | 15,000 | 24,819 | (9,819) | 13,600 | 11,703 | 1,897 |
| | -------- | --------- | ---------- | -------- | --------- | ---------- |
| மொத்தம் | 2,4000 | 33,399 | (9,399) | 23,176 | 20,456 | 2,720 |
| | ====== | ====== | ====== | ====== | ====== | ====== |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 04 | 05 |
| ஆரம்ப தரங்கள் | 20 | 19 |
| வேறு (அமைய /தற்காலிக) | - | 03 |
| | -------- | ------- |
| மொத்தம் | 25 | 28 |
| | == | ==== |

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எ்லையினை விஞ்சி சேர்க்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்காக மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து ரூபா 113,000 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

அரிசிமாவுடன் அண்மித்த பேக்கிரி உற்பத்தி செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,475,990 செலவு

செய்யப்பட்டிருந்தும் அச் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமையினால் உரிய சொத்துக்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 652,438 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,461 ஆக இருந்தது.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனை / மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 16,819,483 ஆக இருந்தது.

## 2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்த முடியாத கொடுக்கல் வாங்கல்கள்

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 469,825 ஆன செயல்நிமித்த உப கட்டு நிதிகளிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 448,824 தொகையான கட்டுநிதி தீர்க்கப்பட்டிராததுடன் அத்தீர்க்கப்படாத மீதி திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு புத்தங்களிலிருந்து பதிவழிப்பதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 182 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சபையினதும் அமைச்சரினதும் உடன்பாடு பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) பொது முக்கியத்துவம் மிக்க விழாக்களை நடத்துதல் அல்லது சமய, கலாசார, சுகாதார, களியாட்ட அல்லது கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக வருடாந்தம் ரூபா 1,000 கூட்டுத் தொகையை விஞ்சிய செலவினங்களைச் செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(அ) பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வாண்டில் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 62,037 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கல்குளம் நகரில் குப்பைகளை அகற்றுவதற்காக கைரெக்ரட் ஒன்று வாடகைக்குப் பெறப்பட்ட போது அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2.2 ஆம் பிரிவின் பிரகாரமான கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாது மீளாய்வாண்டின் போது நான்கு சந்தர்ப்பங்களில் ரூபா 60,800 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.8 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் மக்களின் வசதி நலன்புரி செயற்பாடுகள், சுகாதாரம், பாதைகள் மற்றும் பொது உபயோகசேவைகளுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் ஆண்டுகளில் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டம் ஒன்றையும் அத்திட்டத்தை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்கள்

2010 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 2,450,000 பெறுமதியான பின்வரும் 06 கமநெகும செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| (i) | 525 தெமடவெவ உப வீதியில் மதகு இட்டு நிர்மாணித்தல் | 300,000 |
| (ii) | 553 மீவெவ்லேவ ஏறுவெவ வீதியை மீளமைப்புச் செய்தல் | 350,000 |
| (iii) | 540 இட்டிகட்டியவெவ வீதி மீளமைப்புச் செய்தல் | 300,000 |

| | | |
|---|---|---|
| (iv) | 553 தெமடவெவ இலிருந்து திறப்பன வெவ வரையான உப வீதியை மீளமைப்புச் செய்தல் | 700,000 |
| (v) | பைரிமடுவ நீர் உத்தேச முறைமை | 500,000 |
| (vi) | திறப்பன நகரில் பிரதான வீதிக்கு தொடபுறும் வகையில் உள்ளக உபவீதிக்கு கொங்ரீட் இடுதல் | 300,000 |
| | | -------------------- |
| | | 2,450,000 |
| | | ======= |

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) கடன் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.